பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

31 05 2024 FRIDAY 7.15 PM

ஆகாஷவாணி

## தலைப்புச் செய்திகள்

- மக்களவை இறுதிக்கட்டத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு அமைதியாக நடைபெற விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.
- வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அஸ்ஸாம் உள்ளிட்ட ஆறு மாநிலங்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- இந்தியா - Nicaragua இடையே பரஸ்பரம் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான பேச்சுக்கள் இன்று நடைபெற்றன.
- சர்வதேச புகையிலை எதிர்ப்பு தினம் இன்று கடைபிடிக்கப்பட்டது.
- பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி – மெக்சிகோவின் Miguel Reyes Varela இணை இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

---- *இனி விரிவான செய்திகள்* ---

<<<<<<<<>>>>>>>

மக்களவை இறுதிக்கட்ட தேர்தல் வாக்குப்பதிவுக்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

ஏழு மாநிலங்கள், ஒரு யூனியன் பிரதேசத்துக்கு உட்பட்ட 57 தொகுதிகளில் நாளை வாக்குப்பதிவு அமைதியாக நடைபெறுவதற்கு விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த இறுதிக்கட்டத் தேர்தலுக்காக ஒரு லட்சத்து 9 ஆயிரம் வாக்குச்சாவடிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்படடுள்ளது.

10 கோடியே 6 லட்சம் பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தொகுதிகளில் 172 தேர்தல் பார்வையாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

வாக்காளர்கள் அனைவருக்கும் வாக்குச்சாவடி சீட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன.

வாக்குச்சாவடிகளில் உரிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதா என்பது குறித்து சம்பந்தப்பட்ட தேர்தல் அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த இறுதிக்கட்டத் தேர்தலில் பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திர மோடி, அக்கட்சியின் மூத்த தலைவர்கள் திரு அனுராக் தாக்கூர், திரு ரவிசங்கர் பிரசாத், காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் திரு மனிஷ் திவாரி, திரு விக்ரமாதித்ய சிங், ராஷ்ட்ரிய ஜனதாதள் கட்சியின் மிஸா பாரதி, திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் அபிஷேக் பானர்ஜி உட்பட பல்வேறு கட்சிகளின் வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

மக்களவைக்கு ஏழு கட்டங்களாக கடந்த 19-ஆம் தேதி தொடங்கி, தேர்தல் நடைபெற்று வருகிறது.

இதுவரை ஆறு கட்டங்களாக 486 தொகுதிகளில் வாக்குப்பதிவு நிறைவடைந்துள்ளது.

வாக்கு எண்ணிக்கை அடுத்த மாதம் 4-ஆம் தேதி மேற்கொள்ளப்படும்.

மக்களவை இறுதிக்கட்ட தேர்தலுடன், ஒடிஷா சட்டப்பேரவைக்கு நான்காவது மற்றும் இறுதிக்கட்டமாக 42 தொகுதிகளிலும் நாளை வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

இதற்கிடையே, மக்களவைத் தேர்தலில் பணபலம் பயன்படுத்தப்படுவதை தடுப்பதற்காக மேற்கொண்ட நடவடிக்கைகள் மூலம், ஆயிரத்து 100 கோடி ரூபாய் மதிப்பிலான பணம் மற்றும் தங்க ஆபரணங்கள் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாக வருமான வரித்துறை கூறியுள்ளது.

இது கடந்த மக்களவைத் தேர்தலுடன் ஒப்பிடுகையில் 182 சதவீதம் அதிகமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>>

அஸ்ஸாமில் பெய்த கனமழை காரணமாக 9 மாவட்டங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த மாவட்டங்களுக்கு உட்பட்ட பெரும்பாலான ஆறுகளில் நீர் அபாயகரமான அளவை எட்டியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மழை வெள்ளத்தினால் 2 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறுகிறார்.

இதில் 35 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் 95 நிவாரண முகாம்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அஸ்ஸாம் அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த மழை வெள்ளத்தினால் இதுவரை 2 பேர் உயிரிழந்திருப்பதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிலச்சரிவு காரணமாக சில இடங்களில் ரயில் சேவையும் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரணப்பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அஸ்ஸாம் அரசு தெரிவித்துள்ளது.

மணிப்பூரிலும் மழை வெள்ளத்தால் ஒரு லட்சத்து 8 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அம்மாநிலத்தில் 56 நிவாரண முகாம்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மழையினால் பாதிக்கப்பட்டவர்கள் இந்த முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

மழை வெள்ளத்தினால் மணிப்பூரில் 3 பேர் உயிரிழந்துள்ளனர். ஒருவரை தேடும் பணி நடைபெற்று வருகிறது.

இதற்கிடையே, மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள அஸ்ஸாம், மணிப்பூர், மேகாலயா, மிசோரம், திரிபுரா, மேற்குவங்கம் ஆகிய மாநிலங்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான உதவிகளை அதிகாரிகள் வழங்கி வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா-வும், அஸ்ஸாம் முதலமைச்சர் திரு ஹிமந்த பிஸ்வா சர்மாவை தொலைபேசியில் தொடர்புகொண்டு, வெள்ள பாதிப்பு குறித்து கேட்டறிந்தார்.

<<<<<<<>>>>>>>

இந்தியா - Nicaragua இடையே பரஸ்பரம் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான பேச்சுக்கள் இன்று நடைபெற்றன.

Nicaragua வெளியுறவு அமைச்சர் திரு Denis Moncada Colindres, வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கரை இன்று தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்.

இந்த பேச்சுக்களின்போது சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<<<>>>>>>>

புகையிலை பழக்கம் பொது சுகாதாரத்திற்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதாக மத்திய சுகாதாரத்துறை செயலர் திரு அபூர்வ சந்திரா கூறியுள்ளார்.

சர்வதேச புகையிலை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு, இன்று புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் காணொலி வாயிலாக கலந்துகொண்டு அவர் பேசினார்.

புகையிலை பழக்கத்தினால் வருடத்திற்கு 13 லட்சம் உயிரிழப்புகள் ஏற்படுவதாக அவர் தெரிவித்தார்.

இது நாட்டின் சுகாதார கட்டமைப்பில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் அவர் கூறினார்.

புகையிலை பயன்பாட்டை ஒடுக்க தேசிய, மாநில மற்றும் மண்டல அளவில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

புகையிலை பழக்கத்தினால் ஏற்படும் தீமைகள் குறித்து இந்த விழிப்புணர்வு நிகழச்சிகளில் எடுத்துரைக்கப்படுவதாகவும் திரு அபூர்வ சந்திரா கூறினார்.

<<<<<<<>>>>>>>

நாடு முழுவதும் கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்துவரும் நிலையில், பல்வேறு பகுதிகளில் தீ விபத்துகள் ஏற்பட்டு வருகின்றன.

தீ விபத்துகளை தவிர்ப்பதற்கு உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று தில்லி தீயணைப்புத்துறை இயக்குனர் திரு Atul Garg கேட்டுக்கொண்டுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர், இதுதொடர்பாக, தங்களது துறை சார்பில் விரிவான கையேடு ஒன்று வெளியிடப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

மின் கசிவு காரணமாக பெரும்பாலான விபத்துகள் ஏற்படுவதாகவும் திரு Atul Garg தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>

ஜம்மு காஷ்மீரில் போக்குவரத்துத்துறை அதிகாரிகள் ஆறு பேர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

ஜம்மு மாவட்டத்துக்கு உட்பட்ட தாண்டா அருகே பேருந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 22 பேர் உயிரிழந்த சம்பவத்தையடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் குறித்து விசாரணை நடத்துவதற்கென சிறப்பு அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த விபத்துக்கு காரணமானவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஜம்மு காஷ்மீர் அரசு எச்சரித்துள்ளது.

<<<<<<<>>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி – மெக்சிகோவின் Miguel Reyes Varela இணை இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் 6-3, 6-4 என்ற செட் கணக்கில், அமெரிக்காவின் Reese Stalder - நெதர்லாந்தின் Sem Verbeek இணையை வென்றது.

------------

பாரிஸ் ஒலிம்பிக் குத்துச்சண்டை போட்டியில் பங்கேற்க இந்தியாவின் நிஷாந்த் தேவ் தகுதி பெற்றுள்ளார்.

தாய்லாந்தின் பாங்காக்கில் நடைபெற்றுவரும் ஒலிம்பிக் குத்துச்சண்டை தகுதி சுற்றுப்போட்டியின் ஆடவர் 71 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், Moldova-வின், Vasile Cebotari-ஐ வென்றார்.

இதன்மூலம், ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க அவர் தகுதி பெற்றார்.

பாரிஸ் ஒலிம்பிக் குத்துச்சண்டை போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியாவின் சார்பில் தகுதி பெறும் முதலாவது வீரர் என்ற பெருமையையும் நிஷாந்த் தேவ் பெற்றுள்ளார்.

----------------------

உலக குத்துச்சண்டை அமைப்பில் இந்திய குத்துச்சண்டை சம்மேளனம் இடம்பெறுகிறது.

-----------------

பாரிஸ் ஒலிம்பிக் ஜூடோ போட்டியில் பங்கேற்க இந்தியாவின் Tulika Maan தகுதி பெற்றுள்ளார்.

------------

சிங்கப்பூர் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Treesa Jolly – Gayatri Gopichant இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 18-21, 21-19, 24-22, என்ற செட் கணக்கில் கொரியாவின் Kim So Yeong - Konghee Yong இணையை வென்றது.

---------------

நார்வே செஸ் போட்டியின் நான்காவது சுற்றில் இந்தியாவின் வைஷாலி வெற்றிபெற்று, முதலிடத்தில் நீடிக்கிறார்.

-------------------

தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான மகளிர் கிரிக்கெட் போட்டித்தொடரில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய அணியின் கேப்டனாக Harmeen Preet Kaur அறிவிக்கப்பட்டுள்ளார்.

---------------

இந்தியா – உஸ்பெகிஸ்தான் இடையேயான நட்புணர்வு கால்பந்து போட்டி தற்போது தாஸ்கண்டில் நடைபெற்று வருகிறது.

<<<<<<<END>>>>>>>